தினமலர்
12/07/23

# உலக மக்கள்தொகை விழிப்புணர்வு

**புதுச்சேரி, ஜூலை 12–** உலக மக்கள் தொகை தினத்தை யொட்டி, புதுச்சேரி ஜிப்மர் மகப்பேறு பிரிவில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

குடும்ப நல கல்வியாளர் வெங்கடேஸ்வரா தலைமை தாங்கினார். துறை தலைவர் கவுரி துரைராஜன், இளம் வயது திருமணத்தை தவிர்க்க வேண்டும். பெண்கள் 21 வயதுக்கு பின்னரே, திருமணம் செய்ய வேண்டும். குழந்தை பிறப்பை தள்ளிப்போட தற்காலிக கருத்தடை சாதனங்களை பயன்படுத்த வேண்டும் என தெரிவித்தார். செவிலியர் கண்காணிப்பாளர் சாந்தி தமிழ்மணி, துணை செவிலியர் கண்காணிப்பாளர் காந்திமதி ஜான்பீட்டர் ஆகியோர் மக்கள் தொகை பெருக்கத்தால் ஏற்படும் விளைவுகளை கூறினர்.

உலக மக்கள் தொகை தினத்தில், குடும்ப கட்டுப்பாடு முறையை தேர்வு செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம் என்று பேராசிரியர் ஜெயலட்சுமி மற்றும் மருத்துவ சமூக பணியாளர்கள் உறுதிமொழி ஏற்றனர்.

மூத்த செவிலியர் அதிகாரி காந்திமதி, நிரந்தர மற்றும் தற்காலிக குடும்ப கட்டுப்பாடு முறைகளை கூறினார். பின், செவிலியர் கல்லுாரி மாணவிகளின் விழிப்புணர்வு நாடகம் நடந்தது.

ஏற்பாடுகளை பேராசிரியர் ஹரிதா சகிலி செய்திருந்தார். ஆலோசகர் வாணி தாசன் நன்றி கூறினார்.